THE WORLD NEEDS THE WORD
IBT

செப்டம்பர் 2024
மலர் 22, இதழ் 12

# சத்திய வார்த்தை

IBT நிறுவனர் (Late) Rev. Prof. S. பன்னீர் செல்வம்

SATHTHIYA VAARTHAI - TAMIL
இந்திய வேதாகம மொழிபெயர்ப்பாளர்களின் செய்தி மலர்

ஆண்டு சந்தா
ரூ. 100/-

# கிறிஸ்து நமக்குத் தரும் சிறப்பான உவமை-அத்திமரம் (FIG TREE)



# கிறிஸ்து நமக்குத் தரும் சிறப்பான உவமை-அத்திமரம் (FIG TREE)

*"நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்" (லூக்கா 3 : 9).*

தேவன் தம்முடைய படைப்பின் வேளையிலே வெளிச்சத்திலே ஆரம்பித்து சகலவிதப் பூண்டுகள், கனி மரங்கள், விருட்சங்களையும் படைத்தார், உருவாக்கினார். எந்த ஒரு குறைவும் இல்லாமல் எல்லாவற்றையும் மனிதன் அனுபவிப்பதற்காக உருவாக்கினார். தேவனுடைய பார்வையில் அது நல்லது என்று கண்டார். தாம் உருவாக்கின அனைத்துமே ஏதோ ஒரு வகையில் தன்னை உருவாக்கின எஜமானனை பிரதிபலிக்கும் வண்ணமாக அதனதன் வேலையை / தொழிலை செய்ய வேண்டுமென விரும்பினார். பெரிய மரங்களான பின்பு அந்த மரத்திற்கு நாம் தண்ணீர்பாய்ச்சி உரம் போட்டாலும், போடாமல் விட்டாலும் அந்தந்த மரம், செடிகள் தங்கள் தங்கள் காலங்களில் பலவிதமானக் கனிகளைக் கொடுத்தும், பலவிதமாக பூக்களைக் கொடுத்தும் மனிதனை சந்தோஷப்படுத்திக் கொண்டு இருக்கிறது. அந்தப் பூக்களையும், காய் கனிகளையும் கிறிஸ்துமஸ், உயிர்த்தெழுந்த பண்டிகை, அறுவடைத் தோத்திரத்திருநாளிலே ஆண்டவருடைய வீடாகிய ஆலயத்தை அலங்கரிப்பதற்கு பயன்படுத்துகிறோம். அப்படி எந்த ஒரு மரமோ, செடியோ எதுவும் தன்னுடைய வேலையைச் செய்யாமல் இருக்குமேயானால், அவைகளை மனிதன் என்ன செய்வான் என்று மேலே உள்ள வசனம் நமக்கு தெரிவிக்கிறது. விறகுக்காக அல்லது வீடு கட்டுவதற்கு உபயோகிப்பார்கள்.

ஆதாமும் ஏவாளும் *''...அத்தி-யிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டு பண்ணினார்கள்'' (ஆதி. 3 : 7).*

தேவன் தான் உருவாக்கின ஏதேன் தோட்டத்திற்கு ஆதாமை அழைத்துக் கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும், காக்கவும் வைத்தார். வேதாகமத்திலே அத்திமரத்தைப் பற்றி முதன் முதலாக ஆதி. 3 : 7-ல் பார்க்கிறோம். எத்தனையோ கனிதரும் மரங்களை ஏதேன் தோட்டத்தில் வைத்திருந்தார். ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுந்தவுடன் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டு தாங்கள் நிர்வாணிகள் என்பதை உணர்ந்தார்கள். ஆதி 2 : 25-யிலே பார்த்தோமானால் அவர்கள் இருவரும் நிர்வாணிகளாயிருந்தும் வெட்கப்படாதிருந்தார்கள் என்று பார்க்கிறோம். பாவத்தில் விழுந்த உடன் தேவனுக்கும், ஆதாமுக்கும் இருந்த அன்பு குறைந்து போனது. வெட்கம் சூழ்ந்து கொண்டது. ஆகவே தங்களுடைய நிர்வாணத்தை மூடுவதற்கு அத்தியிலைகளைக் கொண்டு தங்களுக்கு ஆடைகளை உண்டு பண்ணினார்கள்.

## *1. அத்தி இலையின் குணம் :*

ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் அத்திப் பழங்கள் மற்றும் அநேக மரங்களின் பழங்களை சாப்பிட்டவர்கள். அத்திமர இலைகளை ஆடைகளாக தைக்கக் காரணம், இலைகள் படர்ந்து பெரிய இலைகளாக இருக்கும். கிளைகள் மிகவும் நெருக்கமாக இருக்கும். அத்திப் பழங்களும் நெருக்கமாக இருக்கும். ஆகவே தான் நெருக்கமாக படர்ந்த இலைகளாக இருந்தபடியால் ஆடையாக இணைத்துத் தைப்பதற்கு மிகவும் சுலபமாக இருந்தது. விரைவில் காய்ந்து சருகாக மாறாது. இலை, தண்டு, வேர் எல்லாமே மருத்துவ குணம் நிறைந்தது.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து அத்தி மரத்தை எதனோடு ஒப்பிடுகிறார்? நம்முடைய ஆத்துமாவோடு தான். எத்தனை வருடம் வாழ்ந்தோம் என்பது பெரிதல்ல. எப்படிப்பட்ட உள்ளத்தோடு வாழ்ந்தோம், வாழுகிறோம் என்பதுதான் பெரிது. மற்றவர்கள் நம்மை மதிக்கும்படி வாழ்கிறோமா அல்லது நம்மைப் பார்த்து மற்றவர்கள் மனமாறி வாழ பிரதிபலிக்கிறோமா? அல்லது அடுத்தவர்களுக்கு

இன்பமாகக் காணப்படுகிறோமா அல்லது இடையூறாக / இடஞ்சலாக இருக்கிறோமா? அடுத்தவர்களை மன்னிக்கிறோமா அல்லது மன்னித்தது போல இருக்கிறோமா?

பாவத்தின் குணம் என்ன? அது ஒரு தொற்று வியாதி. ஆதாமிடமிருந்து காயீனுக்குப் போனது. தேவனின் இனிமையான குரல், ஆதாம் ஏவாளுக்கு பயமளிக்கும் குரலாகத் தோன்றியது. கர்த்தருடைய மெல்லிய சத்தமானது நமக்கு சந்தோஷத்தைத் தரும் சத்தமாக மாற வேண்டுமேயானால் முதலில் நம்மிடம் இருக்கும் குறைகளைக் கண்ணோக்குவோம், மாறுவோம், மனந்திரும்புவோம்.

*அத்திமரத்தைக் குறித்து மூன்று தலைப்புகளாகக் காண்போம்.*

1. வாழ்வளிக்கும் அத்தி மரம்.
2. வருஷத்தைக் கூட்டித்தரும் அத்திமரம்.
3. ஆத்தும கனி கொடுக்கும் அத்திமரம்.

*1. வாழ்வளிக்கும் அத்திமரம் :*

*...உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்... (2 இராஜா. 20 : 5).*

எசேக்கியா என்றால் *யேகோவாவின் பலம்* என்று அர்த்தம். தனது இருபத்தைந்து வயதில் யூதாவின் இராஜாவானான். தகப்பன் ஆகாஸ், தாய் – ஆபி. இஸ்ரவேல் தேசம் இரண்டாகப் பிரிந்து (ரெகொபெயாம் – சாலொமோனின் மகன் காலத்தில்) பதிமூன்றாவது ராஜாவாக பதவி வகித்தவர் எசேக்கியா. நாற்பத்தி மூன்று (43 years) ஆண்டுகள் அரசாண்டார். தாவீதுக்குப் பின்னர் அரசாண்ட யாவரிலும் மிகவும் சிறந்த அரசர் எசேக்கியா.

*கர்த்தரின் பார்வையிலே கிடைத்த சான்றிதழ்:*

மேடைகளை அகற்றிய முதல் அரசர். சிலைகளைத் தகர்த்து, விக்கிரகத் தோப்புகளை வெட்டி, மோசே பண்ணியிருந்த வெண்கலச் சர்ப்பத்தை உடைத்துப் போட்டவர்.

எசேக்கியா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரின் மேல் வைத்த நம்பிக்கையாலே *எசேக்கியாவுக்கு பின்னும் எசேக்கியாவுக்கு முன்னும் இருந்த யூதாவின் ராஜாக்களிலெல்லாம் அவனைப்போல் ஒருவனும் இருந்ததில்லை* என்பது எவ்வளவு அருமையான சான்றிதழ்.

நமது வாழ்க்கையின் இறுதியில் கர்த்தர் நம்மைப் பார்த்து கர்த்தரின் பார்வைக்கு செம்மையானதைச் செய்தோம் என்று கூறும்படி வாழ்வோமாக.

கனிதரும் மரத்தைப் போல் எசேக்கியா வாழ்ந்தார் என்று கூறினால் அது மிகையாகாது. அப்பேர்பட்ட ராஜாவுக்கு ஒரு சுகவீனம் வந்தால் கர்த்தர் பார்த்துக் கொண்டு கடந்து செல்லவே மாட்டார். ஒரு கடுகளவு கர்த்தருக்கென்று நாம் செய்வோமானால் நமக்கு மலையளவு செய்வதற்கு கர்த்தர் காத்துக் கொண்டிருக்கிறார். அதிலே சந்தேகமே படவேண்டாம்.

*பிளவை என்றால் என்ன?*

ஏசாயா தீர்க்கதரிசி ராஜாவை நோக்கி *''நீர் உமது வீட்டுக் காரியத்தை ஒழுங்குபடுத்தும்; நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார்''* என்றான் (2 இராஜா. 20 : 1).

எந்த ஒரு மனுஷனும் தன் வாழ்நாளில் நோயில்லாமல் வாழ்ந்ததாக சரித்திரம் கிடையாது. ஏதாவது ஒரு வாதையினால் கஷ்டப்பட்டுத்தான் ஆகவேண்டும். எசேக்கியா யூதா தேசத்து ராஜாவாயிருந்தாலும் அவருக்குள் ஒரு நோய் வந்தது. அதுதான் பிளவை. இந்தப் பிளவை பொதுவாக எந்த இடத்தில் வரும் என்றால் ஒரு

இடஞ்சலான இடத்தில் வரும். தொடைக்கும், அடிவயிறுக்கும் இடையே உள்ள பள்ளமான இடத்தில் வரும். நடக்க முடியாது. நிற்க முடியாது. கால் நீட்டி படுக்க முடியாது. ஆகவேதான் எசேக்கியா படுத்தபடியே சுவர் பக்கமாக முகத்தை மட்டும் திருப்பி அழுதான்.

வாழ்வளிக்கும் நம் ஆண்டவர், *''தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி, அவர்களை அழிவுக்குத் தப்புவிக்கிறார்'' (சங். 107 : 20).* எசேக்கியா கூறியதை எல்லாம் கேட்ட நம் தேவன், ஏசாயாவிடம் அத்திப் பழத்து அடையைக் கொண்டு பிளவையின் மேல் பற்று போடும்படிக் கூறினார். இரண்டே நாளில் குணமானார். மூன்றாம் நாளில் தேவன் சொல்லியவாறு ஆலயத்துக்குச் சென்றார்.

சுகமளிக்கப் பிறந்த அத்திமரம் ஒரு மருத்துவ மரம். பூலோகத்திலே எத்தனையோ மரங்கள் இருந்தாலும், விவிலியத்திலே அத்திமரம், தன்னுடைய பெயரை கிறிஸ்துவினால் நீங்கா இடத்தை பெற்றுக்கொண்டது.

குணமானதற்கு பின்புதான் மனாசே பிறந்தான். கர்த்தர் யூதா தேசத்துக்கு ஆதரவாயிருந்தார். எசேக்கியாவின் விண்ணப்பத்தை சர்வலோக ராஜா கேட்டார். எசேக்கியாவின் கண்ணீரைக் கண்டார். எல்லாவற்றிற்கும் ஒரு அங்கீகாரம் தந்தார். அத்திப்பழ அடையால் மரணம் தள்ளிப் போடப்பட்டது. பதினைந்து வருடத்தை தேவன் கூட்டித் தந்தார்.

## *2. வருஷத்தைக் கூட்டித் தரும் அத்திமரம் :*

தோட்டக்காரன் எஜமானனைப் பார்த்து, *''...ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்...''*என்றான் (லூக். 13 : 8).

ஆண்டவராகிய கிறிஸ்து எந்த ஒரு விஷயத்தையும் சீடர்களிடம் கூறும்போது உவமையாகத்தான் கூறி தெளிவுபடுத்துவார். அதற்குக் காரணம், கிறிஸ்துவின் சீடர்கள் எல்லாருமே மீன் பிடிக்கும் தொழிலிலே இருந்தவர்கள். அநேகக் காரியத்தை உவமையாகப் பேசி விரைவில் / சீக்கிரத்தில் புரிந்து கொள்ளும் அளவுக்கு சீடர்களோடு பழகினார். அப்பேர்ப்பட்ட தேவன் நாம் எப்படி வாழ்ந்தால் நம்முடைய ஆயுட்காலம் கூட்டித் தரப்படும் என்று உவமையாக (Parables) ஒரு அத்திமரத்தைக் குறித்து பேசுகிறார்.

பொதுவாக லூக்கா புத்தகத்தின் அதிகாரம் 13 : 6-9 வசனங்கள் அடங்கிய பகுதியானது வருடக் கடைசி நாளான டிசம்பர் 31-ஆம் தேதி செய்திக்காக எல்லா ஊழியர்களும் எடுத்துக் கொள்ளும் வேதப்பகுதி.

இந்த வேதாகமப் பகுதியிலும் ஆண்டவர் ஒரு அத்தி மரத்தைக் குறித்து பேசுகிறார். திராட்சைத் தோட்டத்தில் ஒரு அத்தி மரத்தை நட்டிருந்ததாகக் கூறுகிறார். பொதுவாக இஸ்ரவேலர் எந்த ஒரு மரத்தையும் திராட்சைத் தோட்டத்தில் நட்டதாக நாம் வேதத்தில் காணமுடியாது. அப்படி நடவும் மாட்டார்கள். ஆனால், *உலக எஜமானன் ஏன் அப்படிச் சொன்னார்* என்று பார்த்தால் அதற்கு ஒரு காரணம் இருக்கிறது. அவ்வாறே தேவன் விசுவாசிகளான நம்மை மற்றவர்கள் நடுவில் வாழும்படி வைத்துள்ளார்.

காலங்கள் உருண்டோடின. ஒருநாள் எஜமான் அந்த மரத்திலே கனியைத் தேடி வருகிறார். அத்திமரமானது தோட்டக்காரனால் நன்கு பராமரிக்கப்பட்டு, செழிப்பாக இருப்பதைக் காண்கிறார். இலைகள் எல்லாம் எல்லாக் கிளைகளிலும் நெருக்கமாக வளர்ந்திருப்பதைக் கண்டார். ஏதாவது அத்திக்கனி இருக்கிறதா என்று மரத்தை மேல் நோக்கிப் பார்க்கிறார், ஒன்றும் தென்படவில்லை. மனதுக்குள்ளே எஜமானனுக்கு ஒரே வருத்தம். மரத்தை நட்டு, ஏற்கனவே மூன்று வருடங்களாக கனியைத் தேடிக் கொண்டிருக்கிறோம். ஒன்றையும் ருசி பார்க்க முடியாமல் போய்விட்டது. இந்த ஆண்டிலாவது ஏதாவது கிடைக்குமென்று தேடி வந்தால் எதுவுமே இல்லையே என்று எஜமான் மனம் நொந்து

போனார். அத்திமரத்தின் மீதே எஜமானனுக்கு ஒரு வெறுப்பு ஏற்பட்டு விடுகிறது.

தன்னுடைய தோட்டத்திலே அந்த மரம் இருந்து ஒரு பிரயோஜனமுமில்லை. கனியும் கொடுப்பதில்லை. வீணாக தோட்டத்தில் இடத்தையும் அடைத்துக் கொண்டு நிலத்தையும் ஏன் கெடுக்கிறது, இந்த *அத்திமரத்தை வெட்டிப்போடு* என்று தோட்டக்காரனுக்கு கட்டளையிடுகிறார் எஜமான்.

நம்மை உண்டாக்கின தேவன் நம்மிடம் எதிர்பார்ப்பது மனமாற்றம் தான். ஆதாம் ஏவாள் பாவம் செய்தபோது, தன்னுடைய கரங்களால் உருவாக்கப்பட்ட மனிதர்களின் உறவுகளை தேவன் வெட்டிக் கொள்ளாமல் இன்னும் அதிகமாக நேசித்து, தோலினாலான உடையைக் கொடுத்து முன்பை விட அதிக அன்பு கொண்டார். இப்போதும் கூட நமக்காகப் பரிந்து பேசுகிறவராக பரலோகத்தில் தேவனின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

***தோட்டக்காரரின் தாழ்மை :***

***எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷம்... சங். 90 : 10.***

மனிதனுடைய வாழ்வு / ஜீவன் எவ்வளவு காலம் இந்த பூமியில் நிலைத்திருக்கும் என்று கணிக்கவோ, சொல்லவோ முடியாது. அந்தநாள் எதுவென்று நம் ஆண்டவருக்கு மட்டும்தான் தெரியும். சங்கீதக்காரன் சொல்வதுபோல் நம்முடைய ஆயுசு நாட்கள் எழுபது ஆண்டுகள். எந்த ஒரு சுகவீனமும், கர்த்தருடைய கிருபையும் நம்மை சூழ்ந்திருக்குமேயானால், எண்பது வயதென்ன அதற்குமேலும் நாம் இந்த புவனத்தில் / உலகில் வாழலாம்.

ஆனால், நம்முடைய ஜீவன் எத்தனை ஆண்டுகள் வரைக்கும் என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு நிமிடமும் நாம் உயிரோடு வாழ்வது கர்த்தரின் பெரிதான கிருபை. அந்தக் கிருபையின் காலங்களை நாம் காத்துக் கொள்ள வேண்டும். நம்முடைய ஜீவன் இந்த உலகத்தில் இருக்கும் போதே, நாம் மனம்மாறி / பாவங்களை அறிக்கையிட்டு, கர்த்தரிடம் மன்னிப்பு கேட்டு, அடுத்தவர்களை மன்னித்து, ஆவியின் கனியாக எல்லோரிடமும் அன்பு பாராட்டி, ஒருவர் படும் கஷ்டத்திலே நாமும் பங்கு கொண்டு வாழ்வதற்குத்தான் தோட்டக்காரராகிய நம் ஆண்டவர் ஒவ்வொரு ஆண்டையும் நமக்கு கூட்டித் தந்து கொண்டிருக்கிறார். ஒவ்வொரு நிமிடமும் கர்த்தர் தரும் ஈவு.

தோட்டக்காரன் என்ன கூறுகிறான்? நான் இந்த அத்திமரத்தைச் சுற்றிலும் கொத்தி எரு போடுவேன். இந்த வருஷமும் இருக்கட்டும், என்று கூறுகிறான். நாம் மனம்மாறி, மனம் மாற்றம் அடைந்து, கர்த்தர் விரும்பும் பாதையில் நடப்போமானால், அளவில்லா மகிழ்ச்சி அடைவது நம் ஆண்டவர் மட்டும் தான். நம்மை ஒரு கனி தரும் / கனி கொடுப்போம் என்று கருதி அத்திமரத்தை வெட்டாமல் எஜமானனின் கட்டளையிலிருந்து பாதுகாத்தது போல் ஆண்டவர் நம்மை அழிப்பதற்கு அல்ல, இரட்சிப்பதற்கே பாலகனாய் பிறந்து, நம்முடைய மீட்புக்காக கல்வாரி வரை பல பாடுகளோடு சென்றார். அப்பேர்ப்பட்ட தகப்பன் நமக்கு இந்த ஆண்டையும் கூட்டித் தந்திருக்கிறார். காலத்தை ஆண்டவர் விரும்பும் விதமாக காத்துக் கொள்வோம்.

***ஆத்தும கனி கொடுக்கும் அத்திமரம் :***

***நல்ல மரமானது கெட்ட கனி கொடாது. கெட்ட மரமானது நல்ல கனி கொடாது. (லூக்கா 6 : 43) அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும்... நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்.... இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும். (லூக். 6 : 44,45)***

தேவன் தன்னுடைய படைப்பிலே பூமியின் மேல் எங்கும் *விதை தரும் கனி மரங்களாகிய* சகலவித விருட்சங்களையும் படைத்தார். கர்த்தர் படைத்த சகலவித விருட்சங்களின் கனிகளையும் சுவைத்து உண்ணும் நாம், தேவன் நம்மைத் தேடி வரும் நாளிலே ஆவியின் கனிகளாகிய ஒன்பது கனிகளில், தேவன் ஒரு கனியைப் பார்த்தால் கூட எவ்வளவு சந்தோஷப்படுவார். எந்த ஒரு கனியும் நம் உள்ளத்திலே இல்லாமல் இருக்கும்பட்சத்தில் தேவன் நம்மைக் குறித்து என்ன நினைப்பார்? நமக்கு நல்ல சரீர, சுகம், பெலன், ஆயுளை (70, 80 வயதும் அதற்கும் மேலாக) கூட்டித் தந்தும் மனிதர்களாகிய நம் இருதயமாகிய பொக்கிஷத்திலிருந்து எந்தவொரு கனியும் இல்லாமல் போகுமேயானால் இத்தனை ஆண்டுகள் வாழ்ந்தது எல்லாம் வீண். மனமாற்றம் (கனி) இல்லாமல் நிச்சயமாக மரணத்திற்குப் பின் பரலோகத்தை எட்டிக்கூட பார்க்க தகுதியற்றவர்களாகி விடுவோம்.

*<u>ஆயக்காரன் பெற்றுக் கொண்ட அற்புத அத்திக்கனி:</u>*

*இயேசு அவனை நோக்கி : "இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது...." (லூக்கா 19 : 9).*

லூக்கா எழுதின சுவிசேஷத்தில் இரண்டு விதமான ஆயக்காரனை நாம் பார்க்கிறோம். லூக்கா 18 : 13-லே ஒரு ஆயக்காரன் எப்படி ஜெபித்தான் என்று பார்க்கலாம். *பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்,* என்றான். அருகில் நின்ற பரிசேயனைப் பற்றி எந்தவொரு குறையும் கூறவில்லை. நீதிமான் என்ற ஒரு அற்புதக் கனியைப் பெற்றான்.

அதேபோல் லூக்கா 19-ஆம் அதிகாரத்தில் ஒரு ஆயக்காரனைக் காண்கிறோம். ஐசுவரியனான சகேயு என்னும் ஆயக்காரன் மிகவும் செல்வந்தனாயிருந்தான். ஆனால், எரிகோ பட்டணத்தில் வாழ்ந்த மக்கள் ஒருவர் கூட சகேயுவை நேசிக்கவில்லை.

இயேசுவானவர் எரிகோ பட்டணத்து வீதியிலே வருகிறார் என்று கேள்விபட்டபோது, அந்த வாய்ப்பைப் பயன்படுத்தி இயேசுவைக் காணத்தீர்மானித்தான். தான் மிகவும் குள்ளனாக இருந்தபடியால் எங்கே ஏறி நின்றால் தன்னால் பார்க்க முடியும் என்று யோசித்தான். தலைவனாகவும், செல்வந்தனாகவும் இருக்கும் எந்த ஒரு மனிதனும் ஓடவோ, மரத்தில் ஏறவோ மாட்டான். சகேயுவைப் பொறுத்தமட்டில் யார் தன்னைப் பற்றி என்ன நினைத்தாலும் பரவாயில்லை, நான் கண்டிப்பாக இயேசுவை பார்த்தே தீருவேன், கூட்டத்தில் போய் நின்றால் நிச்சயமாக இயேசுவை பார்க்க இயலாது என்று கருதி, அடர்த்தியான இலைகளுள்ள ஒரு அத்தி மரத்தில் ஏறி அமர்ந்து கொண்டான். ஆண்டவராகிய கிறிஸ்து அருகில் நெருங்கி வரவர சகேயுவுக்கு இருந்த சந்தோஷம் எல்லை மீறியது. இயேசுவானவர் நேராக சகேயு இருந்த அத்திமரத்திற்கு கீழே வந்து நின்றார்.

தம்மை ஆவலாகத் தேடும் ஒவ்வொரு மனிதனையும் நிச்சயமாக சந்தித்து, அவனோடு உறவு கொள்வார் நம் ஆண்டவர். அதுவரை சகேயுவை நேரில் பார்த்திராத இயேசு *அண்ணாந்து பார்த்து,* அவனைக் கண்டு சகேயுவே, *சீக்கிரமாய் இறங்கி வா,* உன் வீட்டிலே தங்க வேண்டும் என்று *பெயர் சொல்லி அழைத்தார்.*

அத்தனை பெரிய ஜனக்கூட்டத்திற்கு முன்னால் சகேயுவின் நிலை எப்படியிருந்திருக்கும்!! ஒருபக்கம் பயம், ஒரு பக்கம் மகிழ்ச்சி.

இரண்டு ஆயக்காரர்களிடமிருந்தது தாழ்மை. இயேசுவைக் காணவேண்டும் என்று ஓடி வந்தான். இயேசுவைக் கண்டு நின்று, தான் செய்யும் காரியம், செய்த காரியம் எல்லாவற்றையும் ஒளிவு மறைவு இல்லாமல் கர்த்தரிடம் பேசினான். இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்று சொல்லி, சகேயுவின் வீட்டை இரட்சிப்பின் வீடாக மாற்றினார் சர்வலோக சிருஷ்டிக் கர்த்தர். இரட்சிப்பு என்ற

அற்புத அத்திக்கனியை இயேசுவின் மூலம் பெற்றுக் கொண்டான் எரிகோவில் வாழ்ந்த ஆயக்காரன்.

எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம் 24-ஆம் அதிகாரத்திலே நேபுகாத்நேச்சர் (பாபிலோன் ராஜா) யூதாவின் ராஜா (எகொனியா) பிரபுக்கள், தச்சர், கொல்லர் அனைவரையும் பாபிலோனுக்கு சிறைபிடித்துச் சென்றான். நம் தேவன் ஒரு அருமையான தரிசனத்திலே இரண்டு கூடைகளை எரேமியாவுக்கு காண்பிக்கிறார். ஒரு கூடையில் நல்ல அத்திப் பழங்களையும் மற்றொரு கூடையில் மிகவும் கெட்ட அத்திப்பழங்களையும் காண்கிறார்.

இந்த நல்ல அத்திப்பழங்களை யாருடன் தேவன் ஒப்பிட்டுப் பேசுகிறார்? கல்தேயர் தேசத்துக்கு சிறைப்பட்டுப் போன அனைவரையும் நல்ல அத்திப்பழங்களுக்கு ஒப்பிடுகிறார். அதுமட்டுமல்லாமல், அவர்களுக்கு நன்மையுண்டாக தம்முடைய கண்களை சிறைப்பட்டுப் போனவர்கள் மீது வைத்து, மீண்டும் எருசலேம் தேசத்திற்கு திரும்பி வரப் பண்ணுவேன் என்கிறார்.

*...அவர்களைக் கட்டுவேன், அவர்களை இடிக்க மாட்டேன், அவர்களை நாட்டுவேன், அவர்களை பிடுங்க மாட்டேன்... அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்.*

*... முழு இருதயத்தோடும் என்னிடத்திற்குத் திரும்புவார்கள் என்று இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் (எரே. 24 : 6, 7).*

எப்பேர்ப்பட்ட வாக்குத்தத்த வார்த்தைகளை சுளை சுளையாக திகட்டாத இனிப்பாக கொடுக்கிறார் நம்முடைய ஆண்டவர்.

வேதாகமத்திலே அநேகர் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால், மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றவர்கள் இரண்டு பேர். ராஜாக்களில் தாவீதும், முற்பிதாக்களில் இஸ்ரவேலும். கர்த்தர் தம்மைப்பற்றிக் குறிப்பிடும் போது தாவீதின் குமாரனென்றும், இஸ்ரவேலின் தேவன் என்றும் குறிப்பிடுகிறார்.

எகிப்திலிருந்து கானான் தேசம் வரும் வரைக்கும் இஸ்ரவேல் மக்களால் மோசே மற்றும் யோசுவா படாதபாடு படுகிறார்கள். வணங்காக் கழுத்துள்ள ஜனங்கள் என்று தெரிந்தாலும் இஸ்ரவேல் மக்களை மன்னித்து, வழிநடத்தி, தேவைகளை அவ்வப்பொழுது சந்தித்து வந்த தேவாதி தேவன்.

ஆண்டவருடைய பிள்ளைகளான நாம் எங்கு சென்றாலும் அவரின் பார்வையின்றி விலகிச் செல்லவோ, தப்பிக்கவோ முடியாது. எரேமியா கண்ட தரிசனத்திலே நல்ல அத்திப்பழக் கூடையைக் கண்டது போல் கர்த்தரின் பிள்ளைகளான நாம் நல்ல அத்திக்கனிகளாக இருப்போமாக!

வாழ்வளிக்கும் அத்திமரத்திலே ஒரு ராஜா ஆண்டவர் விரும்பும் வண்ணமாக யூதா நாட்டு மக்களை நடத்தினதால் எந்தவொரு குறையும் இல்லாமல் தேவன் எசேக்கியாவை நடத்தினார்.

ஆண்டைக் கூட்டித்தரும் அத்திமரத்தில் நம் கர்த்தர் இந்த ஆண்டையும் கூட்டித் தந்திருக்கிறார். நம் எல்லோருக்கும் கர்த்தர் எதிர்பார்க்கும் கனியைத் தந்து பரலோக தோட்டக்காரரான கிறிஸ்து வந்து பறித்துக் கொள்ளும் அத்திமரமாக காணப்படுவோமாக.

ஆத்தும கனி தரும் அத்திமரத்திலிருந்து இறங்கின சகேயு இனி ஏறத் தேவையில்லை. கிறிஸ்துவை முகமுகமாய்ப் பார்த்தான். அவசரப்படவில்லை. நின்று பேசினான். கிறிஸ்துவோடு ஒப்புரவானான்; மனம் மாறினான். அத்திமரத்திலிருந்த இரட்சிப்பு என்னும் நல்ல அத்திப்பழத்தை உயிர்த்தெழுந்த ஆண்டவரிடமிருந்து பெற்றுக் கொண்டான். மனம் மாறுவோம்.

*"God Bless You"*

*– சகோதரி. பேர்ல் குயிலிராஜா*

# IBT-இன் நிகழ்வுகள்



30.06.2024 அன்று கோவை
சின்னமோப்பேரிபாளையம், C.S.I. ஆலயத்தில்
தேவ செய்தியளிக்கும் திரு. ராஜசேகரன் அவர்கள்.



30.06.2024 அன்று கோவை, கணியூர்
C.S.I. ஆலயத்தில் IBT ஊழிய விளக்கமளிக்கும்
திரு. ஜாண்சேகர் அவர்கள்.



14.07.2024 அன்று மேட்டூர் டேமிலுள்ள
Fire Revival Prayer Band சபையில்
தேவ செய்தியளிக்கும் திரு. ராஜகுமார் அவர்கள்.



14.07.2024 அன்று மேட்டூர் டேமிலுள்ள
Fire Revival Prayer Band சபையில் IBT ஊழிய
விளக்கமளிக்கும் சத்திய வார்த்தை பத்திரிகை
ஆசிரியர் திரு. K. ஜெய்சிங் அவர்கள்.



20.07.2024 அன்று IBT மையத்தில் நடைபெற்ற
திட்டக்கூடுகையில் தேவ செய்தியளிக்கும்
IBT செயலர் திரு. G. வரமணிராஜ் அவர்கள்.




20.07.2024 அன்று திட்டக்கூடுகையில் பாடல்
ஆராதனை நடத்தும் சகோ. ராஜகுமார்
அவர்களும், அவருடன் கீ-போர்டு வாசிக்கும்
சகோ. எஸ்றா காலேப் அவர்கள்.

# IBT-இன் நிகழ்வுகள்




IBT ஊழியம் FMPB-உடன் இணைந்து மொழி பெயர்ப்பு பணி செய்வது குறித்து விளக்கமளிக்கும் IBT தலைவர் திரு. ஜெபஸ் செல்வின் அவர்கள்.



திட்டக்கூடுகையில் அடுத்த ஆண்டு IBT மூலமாக வெளியிடப்படும் காலண்டர் மாதிரியை காண்பிக்கும் IBT-யின் பொருளர் திரு. M. ஜான்வில்லியம் அவர்கள்.




திட்டக்கூடுகையில் முன்னேற்றப் பணியாளர்களின் பணித்தளப் பார்வை குறித்து விவரிக்கும் IBT-யின் பணித்தள இயக்குநர் திரு. சாமுவேல் ஞானதாஸ் அவர்கள்.




திட்டக்கூடுகை முதல் நாள் முடிவு ஜெபத்தை ஏறெடுக்கும் IBT-யின் முன்னாள் தலைவர் திரு. S. தீமோத்தி அவர்கள்.




21.07.2024, IBT-யின் 2வது நாள் திட்டக்கூடுகை ஞாயிறு ஆராதனை வேளையில் தேவ செய்தியளிக்கும் சென்னை S.T.E.C.I. சபையின் ஆயர் Rev. ராஜ் அவர்கள்.



IBT திட்டக்கூடுகையில் பங்கேற்ற பிரதிநிதிகள்.

# ஆசிரியர் மடல்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர, சகோதரிகளுக்கு, சத்திய வார்த்தையின் பத்திரிகையின் சார்பாக எங்கள் அன்பின் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*''பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்-தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே'' (எபி. 12 : 4).*

இயேசு கிறிஸ்துவே இதில் நமக்கு முன் உதாரணமாக இருக்கிறார். தேவனுடைய குமாரன் என்கிற ஸ்தானத்தை கொள்ளையாடின பொருளாய் எண்ணாமல், தன்னைத் தாழ்த்தி, மனுஷ சாயல் எடுத்து, பிதாவின் சித்தம் நிறைவேற்ற சிலுவையில் தன்னை அறைய ஒப்புக் கொடுத்து மனுக்குலத்தை மீட்டார். ஆனால், சிலுவையில் அவர் பாடுபடும் பொழுதும், அதற்கு முன்பும் அநேகர் அவரை அவமானப் படுத்தினார்கள், அடித்தார்கள். ஆனால், இயேசு மாம்ச கிரியைகளான கோபம், பகை, பெருமை, பழிக்குப் பழி வாங்குதல், பொறாமை, கொலை வெறி, எரிச்சல் போன்ற எதையும் வெளிப்படுத்தாமல், அன்பால் நிறைந்து அவர்களுக்காக பிதாவிடம் பரிந்து பேசினார்.

நமக்குள் இரண்டு விதமான மிருகங்கள் இருக்கின்றது. ஒன்று நல்ல மிருகம். மற்றொன்று கெட்ட மிருகம். இதில் நாம் எதற்கு அதிகமாய் உணவு அளிக்கிறோமோ, அதுவே அதிக பெலனடைந்து நம்மை ஆளுகை செய்யும். ஆகவே, நம்முடைய கண்களின் பார்வை பரிசுத்தமாயும், சிந்தையின் எண்ணங்கள் பரிசுத்தமாயும், இருதயத்தின் யோசனை நல்லதாயும் இருந்தால், ஆவிக்குரிய வாழ்க்கையில் பெலனாய் இருப்போம். நாம் பார்க்கிற கண்களின் காட்சிகள் ஆபாசமாகவும், சிந்தனைகள் அசுத்தமாயும், இருதயம் பொறாமையினாலும், கசப்பினாலும் நிறைந்திருந்தால், நாம் எளிதாக பாவ வாழ்க்கையில் வீழ்ந்து விடுவோம்.

பலமான மிருகமான சிங்கத்தினால் செத்தவர்களைக் காட்டிலும், சின்ன கொசுவால் இறந்தவர்கள் அதிகம். பெரிய பெரிய பாவங்கள், கொலை, விபச்சாரம், மதுபானம், விக்கிரக ஆராதனை, பில்லி சூனியம், ஓரினச் சேர்க்கை போன்ற இந்த பாவத்தினால் விழுந்தவர்களைக் காட்டிலும், கோபம், பொறாமை, கீழ்ப்படியாமை, பகை, எரிச்சல், சகோதர அன்பில்லாமை, உண்மையில்லாமை போன்ற பாவங்களால் விழுந்தவர்கள் அதிகம்.

பலவந்தம் பண்ணுகிறவர்களே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள் என்று வேதம் சொல்கிறது. பலவந்தம் என்றவுடன் அநேகருக்கு ஊக்கமான ஜெபம் என்றுதான் நினைவுக்கு வரும். அது மாத்திரமல்ல, இச்சைக்கு நேராக கண்கள் இழுக்கப்படும்பொழுது, அதை எதிர்த்து போராடி கண்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பது பலவந்தம். கைகளை மாம்சத்துக்கு விட்டுக் கொடுக்காமல் ஆவியானவருக்கு அடிமையாக்குவது பலவந்தம். காட்டாற்று வெள்ளம் போலவும், முரட்டு குதிரை போலவும் பாய்ந்தோடும் அடங்காத எண்ணங்களை கிறிஸ்து இயேசுவுக்குள்ளாய் சிறைப்படுத்துவது பலவந்தம். பெருமை எனும் போதை தலைக்கேறும் போது, உடனடியாக தாழ்மையின் சிந்தை அணியப் பழகுவது பலவந்தம்.

இயேசு கிறிஸ்து 40 நாள் உபவாசமாயிருந்து பசியாய் இருந்த போதும், பிசாசினால் சோதிக்கப்படும் போது மாம்ச இச்சைக்கு இடங்கொடுக்கவில்லை. ஆனால், ஏசாவோ ஒருநாள் களைப்போடு இருந்ததற்காகவும், கூழுக்காகவும் தன் சேஷ்டபுத்திர பாகத்தை அற்பமாய் எண்ணி விற்றுப்போட்டான்.

பிசாசு இயேசுவை தேவாலயத்து உப்பரிகையின் மேல் நிறுத்தி தாலக்குதியும், உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு தூதர்கள் ஏந்துவார்கள் என்றான். அதற்கு இயேசு கர்த்தரை பரீட்சை பாராதிருப்பாயாக என்று எழுதியிருக்கிறது என்றார். ஆனால், இஸ்ரவேல் ஜனங்கள் வானாந்திர யாத்திரையில் எத்தனையோ அற்புதங்களைக் கண்ட பின்பும், கர்த்தரை பத்து முறைக்கு மேலாக பரீட்சை பார்த்தார்கள்.

சாலொமோனின் நாட்களுக்குப் பிறகு, தேசம் இரண்டாகப் பிரிந்து இஸ்ரவேல் மற்றும் யூதாவாகயிருந்தது. சாலொமோனின் மகன் ரெகொபெயாம் யூதாவிற்கும், யெரொபெயாம் இஸ்ரவேலுக்கும் ராஜாவாக இருந்தார்கள். இஸ்ரவேலில் உள்ள ஜனங்கள் எருசலேமில் உள்ள கர்த்தருடைய ஆலயத்தில் பலிகளை செலுத்தப்போனால், ஜனங்களுடைய இருதயம் யூதாவின் இராஜா வசமாய் திரும்பும் என்று எண்ணி, இஸ்ரவேலின் ராஜா யெரொபெயாம் இரண்டு பொன் கன்றுக்குட்டிகளை உண்டாக்கி இவைகளே உங்களை எகிப்திலிருந்து வரப்பண்ணினது என ஜனங்களை விக்கிரக ஆராதனைக்கு வழிநடத்தினான். தன்னை தேசத்தின் மேல் ராஜாவாக்கி கர்த்தரை மறந்து தன் ராஜ்யத்திற்காக கர்த்தரை மறுதலித்தான். பிசாசு, இயேசுவிடம் தன்னைப் பணிந்து கொண்டால் உலகத்தின் ராஜ்யங்களைத் தருவேன் என்றான். அதற்கு இயேசு அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்றார்.

*‘‘கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்’’ (கலா. 5:24).*

கடந்த 14.7.2024 அன்று மேட்டூர் டேமிலுள்ள ஞானக்கன்மலை ஆலயத்தில் ஞாயிறு ஆராதனையில் சகோ. ராபர்ட் அவர்கள் தேவ செய்தியும், சகோ. கிதியோன் அவர்கள் IBT ஊழிய அறிமுகமும் செய்தார்கள். இதே நாள் இதே ஊரில் "Fire Revival Prayer Band" சபையில் சகோ. ராஜகுமார் அவர்கள் தேவ செய்தியும், சகோ. ஜெய்சிங் அவர்கள் IBT ஊழிய அறிமுகமும் செய்தார்கள். இதே மாதம் 28-ஆம் தேதியன்று விருதுநகரிலுள்ள “சின்னகொல்லப்பட்டியிலுள்ள TELC சபையில் IBT செயலர் சகோ. G. வரமணிராஜ் அவர்கள் தேவசெய்தியும், ஊழிய அறிமுகமும் கொடுத்தார்கள். இந்நாட்களில் IBT ஊழியத்திற்கு சந்தர்ப்பமும், காணிக்கையும் கொடுத்து, நல்ல வரவேற்பையும் கொடுத்த சபை பாஸ்டர், மூப்பர்கள், பங்கு கொண்ட விசுவாசிகள் அனைவருக்கும் IBT நன்றியினைத் தெரிவிக்கிறது.

கடந்த ஜூலை மாதம் 20, 21-தேதிகளில் கோவை IBT மையத்தில் நடைபெற்ற திட்டக் கூடுகைக்கு பல ஊர்களிலிருந்து பிரதிநிதிகள் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான நல்ல ஆலோசனைகளை வழங்கினார்கள்.

இதே மாதம் 20-ஆம் தேதி மாலையில் IBT-இன் ஆட்சிமன்றக் கூட்டம் (GC Meeting) நடைபெற்றது. இதில் IBT தலைவர், செயலர், பொருளர், பணித்தள இயக்குநர் மற்றும் அங்கத்தினர்கள் கலந்து கொண்டு முக்கிய பணிகளைக் குறித்து திட்டமிட்டார்கள். இக்கூட்டங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தடையின்றி நிறைவேற்றப்பட கர்த்தர் ஆளுகை செய்யவும், IBT-இன் மொழிபெயர்ப்பு, மிஷனெரிப் பணிகள், இலக்கியப் பணிகள் மற்றும் சமூகப்பணிகளுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள்.

கர்த்தர் தாமே பத்திரிகை வாசகர்கள் ஒவ்வொருவரையும், அவர்கள் குடும்பத்தையும் அதிகமாக ஆசீர்வதித்துக் காப்பாராக!

“ஷாலோம்!”

கர்த்தரின் பணியில்
*உங்கள் சகோதரன்*
*K. ஜெய்சிங்*

# பணித்தளச் செய்திகள்

*முன்னேற்றப்பணியாளர் :*
*சகோ. கே. கிதியோன்*
*பணித்தளம் : கோயமுத்தூர் (தமிழ்நாடு)*

கர்த்தருடைய வல்லமையான நாமத்திற்கு மகிமை உண்டாவதாக!

தேவனுடைய பெரிதான கிருபையினாலே கடந்த மாதம் முன்னேற்றப் பணிகளைத் தடையின்றி செய்ய முடிந்தது. அதற்காக கர்த்தரைத் துதிக்கிறேன். கணியூர் சி.எஸ்.ஐ. சபையில் IBT-இன் முன்னேற்றக் கூட்டம் நடைபெற அச்சபையின் ஆயரைக் கேட்டுக் கொண்டபடி, ஜூன் மாதம் நடக்க அனுமதி கிடைத்து, 30.6.2024 அன்று இரு சபைகளில் திரு. எஸ். ராஜசேகரன் அவர்கள் தேவசெய்தி கொடுத்தார் (கணியூர் மற்றும் சின்னமோப்பேரிபாளையம்). தேவனுக்கு நன்றி! மேலும் மலுமிச்சம்பட்டி, பட்டணம்புதூர், மத்தவராயபுரம், கணபதி ஆகிய ஊர்களிலுள்ள சி.எஸ்.ஐ. சபை ஆயர்களைச் சந்தித்து IBT சார்பாக முன்னேற்றக் கூட்டங்கள் நடத்துவதற்கு நாள் கேட்டு வந்தேன். வரும் நாட்களில் தருவதாகக் கூறியுள்ளார்கள்.

முன்னேற்றப் பணிக்காக காருண்யா நகர், ஆலந்துரை, போத்தனூர், பேரூர், செட்டி வீதி, டவுன்ஹால், வெள்ளலூர், ஒண்டிப்புதூர், சிங்காநல்லூர், SIHS காலனி, NGGO காலனி, கணபதி, சரவணம்பட்டி, N.K. பாளையம், கவுண்டம்பாளையம், இடையர்பாளையம், வடவள்ளி, வரதராஜபுரம், சித்ரா, கவுண்டனூர், சுங்கம், ராமநாதபுரம் ஆகிய இடங்களுக்குச் சென்று, IBT தாங்குநர்களச் சந்தித்து, காணிக்கைப் பெற்று, ஜெபித்துவிட்டுவரவும் தேவன் கிருபை செய்தார். பல புதிய தாங்குநர்களைக் கண்டுபிடிக்க பிரயாசப்பட்டு வருகிறேன். இதற்காகவும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

*மொழிபெயர்ப்பாளர் :*
*சகோ. சந்திரகாந்தா பர்லா*
*மொழி : முண்டாரி*
*பணித்தளம் : பாலுப்பள்ளி (ஒடிஷா)*

கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக!

இயேசு கிறிஸ்துவின் பெரிதான கிருபையால் கடந்த மாதத்தில் பழைய ஏற்பாடு பாகம் பிரசங்கி புத்தகத்தில் அதிகாரம் 3 : 1-ஆம் வசனம் முதல் அதி. 12 : 14-ஆம் வசனம் வரையிலும், உன்னதப் பாட்டு அதிகாரம் 1 : 1-ஆம் வசனம் முதல் அதி. 8 : 14-ஆம் வசனம் வரையிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது.

மொழிபெயர்ப்பு செய்வதில் பிரசங்கி புத்தகம், கடினமான ஒன்றாகும். அர்த்தம் கண்டுபிடிக்க முடியாத வார்த்தைகளுக்காக சில பாஸ்டர்கள் மற்றும் முதியவர்களை அணுகி, ஏற்ற வார்த்தைகளைக் கேட்டறிந்தேன். மொழி பெயர்ப்புப்பணி ஆரம்பிக்கும் முன்னே ஜெபித்த பிறகே பணிகளை ஆரம்பிக்கிறேன். ஜெபக்குழு ஏற்படுத்தி IBT-யின் எல்லாவித பணிகளுக்காகவும், பணி புரிபவர்களுக்காகவும், தேசத்திற்காகவும் ஜெபித்து வருகிறோம்.

என் மொழிபெயர்ப்புப் பணி மற்றும் என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

----------•----------

*மிஷனெரி : சகோ. ராமசந்திர நாக்*
*பணித்தளம் : போடோமசிகான் (ஒடிஷா)*

கர்த்தரின் நாமத்திற்கு துதி உண்டாவதாக!

மிஷனெரிப் பணிக்காக கடந்த மாதத்தில் ஹிராகுடா, துமர்முண்டா, பாட்டிகுடா, தெப்ரகுடா, சீர்மா, பொறகுடா, பேட்டல், கசுமிகுடா, முண்டாகாட்,

பாட்டிகம், பரமாசி, தங்கஜாரி, சர்கிகுடா, கோட்பகுடா, மேடகம், காய்குடா மற்றும் அம்தங்கி ஆகிய கிராமங்களுக்குச் சென்று நற்செய்தியை அறிவித்து, கைப்பிரதிகளை விநியோகித்து, அவர்களுக்காக ஜெபித்தேன்.

நான் சந்தித்து நற்செய்தியை அறிவித்தவர்களின் பெயர்கள் : சகோதர்கள் லாபா பத்ரா, க்ருஷ்ணா, பாஸு, ரகுநாத், லோகி, ரூப்தார், புல்சந்த், ஜகர்நாத், மாஹித், கபர்தன், நிலோ, பாய்து, ராஹித், டைத்தாரி, கம்லு, ரோமேஷ், கமல், ரஞ்சித், நிதி மற்றும் சிலர் நற்செய்தியைக் கேட்டார்கள். அதேவேளையில் மறுப்புத் தெரிவித்தவர்களும் இருந்தார்கள். இப்படிப்பட்டவர்களும் இயேசு கிறிஸ்துவை நன்கு அறிந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். இவர்களுக்காகவும் என் மிஷனெரிப் பணிக்காகவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள். என் சகோதரிக்கு பிரசவமாகி, குழந்தை பிறந்து, சுகவீனமுற்றதினால் ICU-வில் வைத்திருக்கிறார்கள். இக்குழந்தை பூரணம் சுகம் பெறவும் ஜெபியுங்கள்.

----------•----------

## முன்னேற்றப் பணியாளர் : சகோ. ஜி.என். சுந்தர்
## பணித்தளம் : தஞ்சாவூர், புதுக்கோட்டை (தமிழ்நாடு)

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

முன்னேற்றப் பணிக்காக தஞ்சாவூரில் அன்னை சிவகாமி நகர், சுந்தரம் நகர், மங்களபுரம், பாலாஜி நகர், கணபதி நகர், எல்.ஐ.சி. விரிவாக்கம், பொன்னகர், ஆலமரத் தெரு, ஏசி கார்டன், ரெசிடன்சி பங்கா தெரு, சன்னதி தெரு, சர்ச் ரோடு, மிஷன் வீதி, நாஞ்சிக்கோட்டை ரோடு, மேட்டுத் தெரு, பங்களா தெரு, தகரக்காரத் தெரு, அம்மன் காலனி, கபிலன் தெரு, அழகி குளம், ராமேஷ் காலனி, எல்லீஸ் நகர் மேலும் புதுக்கோட்டைக்குச் சென்று அங்குள்ள ஐயர் குளம், காமராஜபுரம், கணேஷ் நகர், பெக்ஷல் நகர், செல்லப்பா நகர், சாத்தம்பா நகர், தைல நகர், NGO காலனி, ஜீவா நகர், ஒத்தைத் தெரு, அரிமனம், TVS சண்முகநாதர் நகர், அழகர் அசோக் நகர், கீழராஜ வீதி ஆகிய இடங்களுக்குச் சென்று IBT பங்காளர்கள், தாங்குநர்களைச் சந்தித்து காணிக்கைப் பெற்று, அவர்கள் குடும்பங்களுக்காக ஜெபித்து வந்தேன். தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இரு ஊர்களிலும் பல இடங்களுக்கு கர்த்தர் பெலன் கொடுத்து வருகிறார். ''நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை'' என்ற வார்த்தையின்படியே தேவன் என்னை வழிநடத்திச் செல்கின்றார். சில இடங்களுக்குச் சென்றுவர 20 கி.மீ. தொலைவு உள்ளது.

----------•----------

## மொழிபெயர்ப்பாளர் / மிஷனெரி : சகோ. சோபத்ராம் டோப்போ
## பணித்தளம் : லைலுங்கா (சட்டிஸ்கார்)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

மொழிபெயர்ப்புப் பணியில் சிறுவர் வேதாகமத்தில் புதிய ஏற்பாடு, பழைய ஏற்பாடு சரிபார்ப்புப் பணிகளும், வேதாகமத்தில் புதிய ஏற்பாடு பாகத்தில் அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தில் 5-ஆம் அதிகாரம் முதல் 8-ஆம் அதிகாரம் வரையிலும் வாசிப்பும் இறுதி சரிபார்ப்பும் செய்யப்பட்டது. வீட்டு ஜெபக்கூட்டம் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் குலாமா, லைலுங்கா ஆகிய கிராமங்களில் நடத்தப்படுகிறது. கடந்த மே மாதம் லோகோஸ் முகாமில் சட்டிஷ்காரி மொழியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட சிறுவர் வேதாகமப் புத்தகமும் வெளியிடப்பட்டது. தற்போது இம்மொழிக்கு மொழிபெயர்ப்பாளர் இல்லை.

என் தாய்மொழி குடுக் மொழியில் புதிய ஏற்பாடு, சங்கீதம், நீதிமொழி சரிபார்ப்பு துரிதமாய் நடக்கவும், BSI சரிபார்ப்பிற்குப் பின் அச்சிடப்படவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

<u>மிஷனெரி : சகோ. பட்டிராஜ்</u>
<u>பணித்தளம் : செலாம்பூர்</u>
<u>(உத்திரப்பிரதேசம்)</u>

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

கடந்த மாதம் மிஷனெரிப் பணியில் புரனா, பியாசி, ராம்பூர், மகாரா, ஸ்லகாபாத், முசைலா, நக்வாலி, விசுன்புரா மற்றும் வஷகாரி ஆகிய கிராமங்களுக்குச் சென்று, பல மக்களைச் சந்தித்து, நற்செய்தியை அறிவித்து, கைப்பிரதிகளை வழங்கினேன். இந்தக் கிராமங்களில் பலரைச் சந்தித்து நற்செய்தியை அறிவித்தேன். சகோதரி சர்மிளா தேவி மற்றும் சகோ. நவ்தேவ் இருவருக்காகவும் ஜெபித்தேன். மேலும் மன்னாதேவி, வினோத் சஜோய்தா, பூனம், சுவைதா, பாஸ்மதி, சாரதா ஆகியோரும் மிக வாஞ்சையுடன் நற்செய்தியைக் கேட்டார்கள்.

என்னுடைய மிஷனெரிப் பணியில் ஞாயிறு ஆராதனை, உபவாச ஜெபக்கூட்டம் மற்றும் வீட்டு ஜெபக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இப்பணியில் தடைகள் வராதிருக்கவும், என் குடும்பத்திற்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.

# ஞானம்

1. *... சகல **ஞானத்தையும்** பார்க்கிலும் சாலொமோனின் ஞானம் சிறந்ததாயிருந்தது. 1 இராஜாக்கள் 4 : 30*
2. *... ஆண்டவருக்குப் பயப்படுவதே **ஞானம்;** பொல்லாப்பை விட்டு விலகுவதே புத்தி... யோபு 28 : 28*
3. *புத்திமானுடைய உதடுகளில் விளங்குவது **ஞானம்;** மதிகேடனுடைய முதுகுக்கு ஏற்றது பிரம்பு. நீதிமொழிகள் 10 : 13*
4. *தீவினை செய்வது மூடனுக்கு விளையாட்டு; புத்திமானுக்கோ **ஞானம்** உண்டு. நீதிமொழிகள் 10 : 23*
5. *அகந்தை வந்தால் இலச்சையும் வரும்; தாழ்ந்த சிந்தையுள்ளவர்களிடத்தில் **ஞானம்** உண்டு. நீதிமொழிகள் 11 : 2*
6. *அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும்; ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ **ஞானம்** உண்டு. நீதிமொழிகள் 13 : 10*
7. *தன் வழியைச் சிந்தித்துக் கொள்வது விவேகியின் **ஞானம்;** மூடர்களுடைய வஞ்சனையோ மூடத்தனம். நீதிமொழிகள் 14 : 8*
8. *புத்திமானுடைய இருதயத்தில் **ஞானம்** தங்கும்; மதியீனரிடத்தில் உள்ளதோ வெளிப்படும். நீதிமொழிகள் 14 : 33*
9. ***ஞானம்** புத்திமானுக்கு முன்பாக இருக்கும்; மூடனுடைய கண்களோ பூமியின் கடையாந்தரங்களில் செல்லும். நீதிமொழிகள் 17 : 24*
10. *மூடனுக்கு **ஞானம்** எட்டாத உயரமாயிருக்கும்; அவன் நியாயஸ்தலத்தில் தன் வாயைத் திறவான். நீதிமொழிகள் 24 : 7*

தொகுப்பு : **Miss . Y. *நதியா***

# தேவை

***IBT மொழிபெயர்ப்பாளர்களுக்கு கொடுப்பதற்கு 3 Laptop-கள் தேவைப்படுகிறது. இதற்கான தொகை ரூ. 1,35,000/- ஆகும். இதற்கு Sponsor கிடைப்பதற்காக ஜெபியுங்கள்.***

***- IBT பொருளாளர்***

Indian Bible Translators ஊழியங்களை காணிக்கைகளால் தாங்க விரும்புவோர் கீழே குறிப்பிட்டுள்ள வங்கிகளின் மூலமாகவும், கீழேயுள்ள **QR Code-ஐ Scan** *செய்து கைபேசி மூலமாகவும்* உங்கள் காணிக்கையை எங்களுக்கு அனுப்பலாம்.

**1. STATE BANK OF INDIA**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 30008395600 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | 7231 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | SBIN0007231 |

**2. INDIAN BANK**

| | | |
|---|---|---|
| A/c. No. | : | 475742259 |
| Name | : | Indian Bible Translators |
| Branch Code | : | S107 |
| Branch | : | Peelamedu |
| IFS Code | : | IDIB000S107 |

**SCAN & PAY**

Merchant Name : Indian Bible Translators
UPI ID : INDIANBIBLE@SBI

BHIM | UPI

(அனுப்பப்பட்ட விபரத்தை IBT அலுவலகத்திற்கு உடனடியாகத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். செல் : 90470 57414 இது உங்களுக்கு ஒப்புதல் ரசீது அனுப்ப உதவியாக இருக்கும்)

## கீழே கொடுக்கப்பட்டுள்ள புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு. வாசித்துப் பயனடையுங்கள்..!

| | | |
|---|---|---|
| 1. | வானத்தின் வாசல் | ரூ. 70/- |
| 2. | வானத்தின் மன்னா | ரூ. 70/- |
| 3. | சோர்வும் தீர்வும் | ரூ. 60/- |
| 4. | பயப்படாதிருங்கள் | ரூ. 70/- |
| 5. | வேதாகமப் புத்தகங்களுக்கு ஓர் அறிமுகம் | ரூ. 60/- |
| 6. | உயிருள்ள உதாரணங்கள் | ரூ. 60/- |
| 7. | பாருக்குள் பரலோகம் | ரூ. 100/- |
| 8. | விவிலியப் பயணத்தின் விடிவெள்ளி | ரூ. 100/- |
| 9. | தேவ சத்தம் | ரூ. 100/- |
| 10. | Word of Life (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 11. | Word of Life (மலையாளம்) | ரூ. 100/- |
| 12. | Introduction to the Books of the Bible | ரூ. 70/- |
| 13. | Defeat the Despair (ஆங்கிலம்) | ரூ. 100/- |
| 14. | Seeds for the Good Soil (ஆங்கிலம்) | ரூ. 120/- |
| 15. | சத்திய வார்த்தையின் முத்துக்கள் | ரூ. 120/- |

IBT வெளியிட்டுள்ள புத்தகங்களை தபால் மூலம் பெற விரும்புவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள் – செல் : 90470 57414. நேரிடையாக, எங்கள் முன்னேற்றப் பணியாளர்கள் மற்றும் பிரதிநிதிகள் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகங்கள் ஆவிக்குரிய வாழ்விற்கும், சமுதாய வாழ்வின் வெற்றிக்கும் மிகவும் பயனளிக்கக் கூடிய வகையில் Rev. Prof. S. பன்னீர் செல்வம் அவர்களால் எழுதப்பட்டவைகளாகும். ஆகவே, வாங்கிப் படித்துப் பயன்பெறுங்கள்!

## உலகச் செய்திகள்

★ சீன சைபர் குற்றவாளிகளால் கடத்தப்பட்ட 3000 இந்திய பெண்கள், கம்போடியாவில் அடிமைகளாக இருப்பது தெரிய வந்துள்ளது.

★ இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக கவுதம் கம்பீர் நியமனம்.

★ லண்டனில் நடைபெற்ற விம்பிள்டன் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரில் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் செர்பிய வீரர் நோவக் ஜோகோவிச், ஸ்பெயின் வீரர் கார்லோஸ் அல்கராஸ் மோதினர். இந்த ஆட்டத்தில் கார்லோஸ் அல்கராஸ் 6-2, 6-2, 7-6 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

★ பிரான்சில் நடந்த சர்வதேச செஸ் போட்டியில் ஈரோட்டைச் சேர்ந்த கிராண்ட் மாஸ்டர் ப. இனியன் வெண்கலப் பதக்கம் வென்றார்.

# ஜெபியுங்கள்! துதியுங்கள்!!

1. கடந்த ஜூன் மாதம் 30-ஆம் தேதியன்று கோவை, கணியூர், சி.எஸ்.ஐ. சபையிலும், சின்னமோப்பேரிபாளையம் சி.எஸ்.ஐ. கிளை சபையிலும், ஜூலை மாதம் 14-ஆம் தேதி மேட்டூர் டேமிலுள்ள ஞானக்கன்மலை சபையிலும், Fire Reival Prayer Band சபையிலும், IBT முன்னேற்றக் கூட்டம் நடத்தவும், தேவ செய்தி, ஊழிய அறிமுகம் கொடுக்கவும் சந்தர்ப்பம் கிடைத்ததற்காக கர்த்தரைத் துதியுங்கள். இத்திருச்சபைகள் தொடர்ந்து கர்த்தரின் நாமம் மகிமைப்படவும், வளர்ச்சி பெறவும் ஜெபியுங்கள்.

2. கடந்த ஜூலை மாதம் 20, 21 தேதிகளில் கோவை, IBT மையத்தில் நடைபெற்ற இவ்வருடத்தின் இரண்டாவது திட்டக் கூடுகையில் பல ஊர்களிலுமிருந்து கோவை வந்து பங்கேற்ற IBT-இன் பிரதிநிதிகளுக்காக தேவனைத் துதிப்போம். இந்நாட்களில் ஊழிய வளர்ச்சிக்கென்று எடுக்கப்பட்ட தீர்மானங்கள் அனைத்தும் சரிவர நிறைவேற்றப்படும் படியாக ஒவ்வொரு பிரதிநிதிகளும் கடவுளின் பணியை ஆவியானவரின் துணையுடன் நடப்பிக்க ஜெபியுங்கள்.

3. குவி, சோரா, சௌராஷ்ட்ரா, போஜ்புரி ஆகிய 4 மொழிகளில் ஆவிக்குறிய கிறிஸ்தவப் பாடல்கள் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு, கடந்த லோகோஸ் முகாமில் வெளியிடப்பட்டதற்காகவும், அப்புத்தகங்கள் அந்தந்த மொழி பெயர்ப்பாளர்களுக்கு அச்சகத்திலிருந்து அனுப்பப்பட்டதற்காகவும் கர்த்தரைத் துதியுங்கள். இப்புத்தகங்கள் அவரவர் மொழிபேசும் மக்களுக்கு மிஷனெரிகள் மூலமாகக் கொடுக்கப்படவும், தங்கள் சபைகளிலும், வீடுகளிலும் இப்புத்தகத்திலுள்ள பாடல்களைப் பாடி கர்த்தரைத் துதிக்கும்படியாகவும் ஜெபியுங்கள்.

4. IBT மூலமாக இதுவரை 2 வேதாகமங்கள் அச்சிடப்பட்டு அம்மொழி பேசும் மக்களுக்குக் கொடுக்கப்பட்டதற்காக கர்த்தரைத் துதியுங்கள். அநேக படுகா மக்கள் தங்களுக்கும் வேதாகமம் வேண்டுமென கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மீண்டும் அச்சிடப்பட வேண்டியுள்ளது. இதற்கு படுகா மக்கள் முன்வந்து அச்சிடுவதற்கு Sponsors கிடைப்பதற்கு முயற்சி செய்ய ஜெபியுங்கள்.


Send all your Contributions :
**Cheques / DD / M.O. to**
**INDIAN BIBLE TRANSLATORS**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.
Phone : 0422 - 4520143
WhatsApp & Mobile : 90470 57414
E-mail : indianbibletranslators@gmail.com
Web : www.ibt1.com


## சத்திய வார்த்தை

'சத்திய வார்த்தை' பத்திரிகைக்கு உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம். வருட சந்தா ரூபாய். 100/-

*சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :*

**WORD PUBLISHERS TRUST**
Civil Aerodrome Road, Coimbatore - 641 014.


Editor & Published by On behalf of: **Mr. K. JAISINGH**, **WORD PUBLISHERS TRUST**, 14, Ashok Layout, Civil Aerodrome Road, Coimbatore - 641 014.

Printed by: **Mr. C.K. VENKATESH**, Chandra Prabha Press, 113-118, V.H. Road, CBE-1.




## வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

சத்திய வார்த்தை பத்திரிகையின் சந்தாவை புதுப்பிக்காதிருந்தால் ரூ. 100/-ஐ மணியார்டர் மூலமாகவோ அல்லது கீழே குறிப்பிட்டுள்ள வங்கிக் கணக்கிற்கு அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். வங்கியில் அனுப்பினால் IBT அலுவலகத்திற்குத் தொடர்பு கொண்டு தெரியப்படுத்தவும்.

**தொடர்பு எண். 90470 57414.**

BANK DETAILS
**CENTRAL BANK OF INDIA**
A/c. No. : 1630413107
Name : Word Publishers Trust
Branch : Kalapatti
IFS Code : CBIN0282057

Address :
**WORD PUBLISHERS TRUST**
14, Ashok Layout,
Civil Aerodrome Road,
Coimbatore - 641 014.


**SATHTHIYA VAARTHAI - TAMIL**
Date of Publishing : 2nd & 3rd September 2024
Postal Regd. No. **CB/052/2024-26**
Licensed to Post without Prepayment No.
**TN/WR/CB/164/WPP/2024-2026 (Tamil)**
**RNI No. 82166**